පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක: 492

ආයතනයේ නම : කෘෂිකර්ම දෙපාර්තමේන්තුව

**පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492

நிறுவனத்தின் பெயர் : விவசாயத் திணைக்களம்

பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119 (4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

**Parliamentary Series No: 492**

**Name Of the institution : Department of Agriculture**

Submission Of Observations of Hon. Minister and Steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No .119(4)

மாதிரிப்படிவ இல. 01

பாராளுமன்றத் தொடர் இல : 492

நிறுவனத்தின் பெயர் : விவசாயத் திணைக்களம்

முதலாம் பகுதி 80:00

| தொ.இ. | அவதானிப்பு | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|
| 01 | இடர் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணிவரப்படவில்லை. | இடர் பதிவேடு ஒன்று உள்ளக ரீதியில் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது. 2023,2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்காக விதி/உகஆ/01/28 ஆம் இலக்கத்தின் ஊடாகவும் 2026 ஆம் ஆண்டிற்காக விதி/உகஆ/01/56 ஆம் இலக்கத்தின் ஊடாகவும் இடர் பதிவேடுகள் பேணி வரப்படுகின்றன. |
| 02 | கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் முன்வைக்கப்பட்டு இருந்த ஒவ்வொரு கணக்காய்வு விசாரணைக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய காலப்பகுதிக்குள் பதில்களை வழங்குமாறு சகல பணிப்பாளர் அலகுகளையும் விழிப்புணர்வூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. (இணைப்பு 01) |
| 03 | உள்ளகக் கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் அறிக்கையிடப்பட்டு உள்ளன. | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் 14 கணக்காய்வு விசாரணைகளுக்காக ஒரு மாத காலத்திலும் பார்க்க கூடுதலான காலம் பதில்களை வழங்குவதற்கு இயலாமல் சென்றிருந்த போதிலும் முழுமையான பதில்களை அனுப்பி வைப்பதற்கு தாமதமாகும் சந்தர்ப்பங்களில் அதற்காக தற்காலிக பதில் ஒன்றையேனும் தருவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என உரிய உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டது. |
| 04 | மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் உரிய முறையில் நடாத்தப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டிற்குள் விவசாயத் திணைக்களத்தின் மூலம் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளதுடன் கமத்தொழில் அமைச்சினால் நடாத்தப்பட்ட 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் திணைக்களத்தின் விடயங்கள் கலந்துரையாடப்பட்டு உள்ளன. |

| | | |
|---|---|---|
| 05 | சகல வாகனங்களினதும் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான கடிதங்கள் தம்வசம் காணப்படவில்லை. | விவசாயத் திணைக்களத்திற்கு உரித்தான சகல வாகனங்களினதும் பதிவுச் சான்றிதழ்கள் தலைமை அலுவலகத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையினால், தொடர்ந்தும் உப அலகுகளில் நிலவும் பதிவுச் சான்றிதழ்கள் இருப்பின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு எனது விதி/நி/2/12(1)/18/1 ஆம் இலக்க மற்றும் 2025.12.16 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சகல பணிப்பாளர்களுக்கும் அறியத்தரப்பட்டு உள்ளது. (இணைப்பு 02)<br><br>அதற்கு அமைய தொடர்ந்தும் உப அலகுகளில் நிலவும் பதிவுச் சான்றிதழ்களைத் தருவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றின் தகவல்கள் வாகனங்கள் தொடர்பான தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டு வருகின்றன.<br><br>மேலும் கமத்தொழில் அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து விவசாயப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் பெயரில் பொறுப்பேற்கப்பட்டு வரும் வாகனங்களுக்கு உரிய பதிவுச் சான்றிதழ்கள் அந்தந்த நிறுவனங்களில் இருந்து தருவித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.<br><br>அதற்கு அமைய குறித்த ஆவணங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பான தரவு முறைமை என்பவற்றினைப் பரீட்சித்துப் பார்த்து தொடர்ந்தும் பதிவுச் சான்றிதழ்கள் அற்ற சகல வாகனங்களுக்கான பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 06 | சகல வாகனங்களிலும் அரச இலச்சினையின் படம் காணப்படவில்லை. | விவசாயத் திணைக்களத்தில் காணப்படும் 14 உப அலகுகளுள் 11 அலகுகளுக்கு உரிய சகல குலாம் வாகனங்களிலும் அரச இலச்சினையினை அச்சுப்பதிப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. எஞ்சியுள்ள மூன்று உப அலகுகளில் நிலவும் குலாம் வாகனங்களில் அரச இலச்சினையினை அச்சுப்பதிப்பு செய்தல் பூர்த்தி அடைந்துள்ளமை தொடர்பில் உறுதிப்படுத்துமாறு எனது விதி/நி/2/12/1/15/1 ஆம் இலக்க மற்றும் 2026.04.30 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உரிய பணிப்பாளர்களிடம் வினவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. (இணைப்பு 03) |
| 07 | வாகனம் ஒன்று கழித்து ஒதுக்கப்பட்டு 08 மாத காலத்திலும் குறைவான காலப்பகுதி ஒன்றிற்குள் ஒதுக்கப்பட்டு இருக்கவில்லை. | ✓ 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபம் மற்றும் 2020.08.28 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் 13-நி.ஒ. 770(4) இன் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது நியமிக்கப்படும் விசேட மதிப்பாய்வு சபை ஒன்றினால் கழித்து ஒதுக்கப்படும் வாகனங்களை அடையாளம் காணல் மேற்கொள்ளப்படும்.<br><br>✓ அதன்போது சேதமடைந்துள்ள வாகனங்கள், இயங்கும் நிலையில் இல்லாத பொருளாதார ரீதியில் பயனுறுதி அற்ற வாகனங்கள், மற்றும் இயங்கும் |

| | | |
|---|---|---|
| | | நிலையில் உள்ள பொருளாதார ரீதியில் பயனுறுதியுடைய வாகனங்கள் என்ற வகையில் வகைப்படுத்தல் ஒன்று செய்து கொள்ளல் வேண்டும்.<br><br>✓ நிதிப் பிரிவின் 06/-0-3 ஆம் இலக்க மற்றும் 2023.12.29 ஆம் திகதிய சுற்றுநிருபத்தின் 10.2 இற்கு அமைய விலைமனு கோரும் முறையில் வாகனங்களைக் கழித்து ஒதுக்குதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.<br><br>✓ இவ்வாறு இலங்கை பூராகவும் பரவிக் காணப்படும் விவசாயத் திணைக்களத்திற்கு உரிய கழித்து ஒதுக்கப்பட்ட வாகனங்களின் தகவல்களைச் சேகரித்து குறித்த விலைமனு கோரும் முறையின் கீழ் வாகனங்களை ஏலவிற்பனை செய்யும் போது மேற்படி பணியினை 08 மாதங்களிலும் குறைவான காலப்பகுதி ஒன்றில் மேற்கொள்ளல் செயன்முறை ரீதியில் ஓரளவு சிரமமான பணி ஒன்றாகும் என்பதனைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.<br><br><u>எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்-</u><br><br>✓ கழித்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை ஒதுக்குவதற்கு உரிய வகையில் கழித்து ஒதுக்கும் நிலையினை அடையாளம் காணலை கூடிய விரைவில் மேற்கொள்ளுமாறு சகல பணிப்பாளர்களுக்கும் அறியத்தரப்பட்டு உள்ளது என்பதனை மேலும் அறியத் தருகின்றேன். (இணைப்பு 04) |
| 08 | ஒதுக்கீட்டின் வரையறையினைத் தாண்டி செலவுகளை ஏற்றல் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. | நி.ஒ. 500 (2) இன் பிரகாரம் முற்பணங்களின் மீது பேணி வரப்படும் ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் வரவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டும் அதற்காக குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்குள் உடனடி முற்பணக் கணக்கின் கீழ் கணக்கில் சேர்க்கப்படுவதுடன் இதன் காரணமாக, அந்த நடவடிக்கையின் "பணக் கொடுக்கல்வாங்கல்" திறைசேரிக்கு உரியதாகும் வரை ஒரு கணக்கின் கீழ் கொண்டு வரப்படுவதுடன், நி.ஒ. 500 (5) இன் பிரகாரம் முற்பணக் கணக்கு நடவடிக்கை ஒன்றின் போது "பணக் கொடுக்கல்வாங்கல்" திறைசேரி ஏடுகளில் பதிவு செய்யப்படுவது உரிய முற்பணக் கணக்கில் மேற்கொள்ளப்படும் பற்றுக்கள் மற்றும் வைப்புக்கள் என்ற வகையில் ஆகும் எனக் குறிப்பிடப்பட்டு உள்ளமையினால் பணக் கொடுக்கல்வாங்கல் மாத்திரம் திறைசேரிக்கு அறிக்கையிடப்படும் வகையில் உரிய சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | |
|---|---|---|
| | | எனினும், கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் வரையறைகளில் திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டது எனினும் தவிர்க்க முடியாத காரணம் ஒன்றினால் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்வதற்கான உரிய காலப்பகுதிக்கு முன்னர் அதாவது, 2024.05.31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க இயலாமல் சென்றமையினால் வரையறைகளில் திருத்தம் மேற்கொள்வதற்காக உடன்பட முடியாது என அறியத்தரப்பட்டு உள்ளது. **(இணைப்பு 05)** |
| **09.** | நி.ஒ. 94 (1) இன் பிரகாரம் செலவின விடயம் ஒன்றிற்காக ஒதுக்கப்பட்டு இருந்த ஒதுக்கீட்டில் இருந்து பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ஒதுக்கீட்டின் வரையறையினைத் தாண்டும் வகையில் பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு முன்வந்து இருத்தல். | நீர், மின் கட்டணங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் நாளாந்த நடவடிக்கைகள் தடையின்றி பேணி வருவதற்காக அத்தியவசியம் ஆகையினால், இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன். நீர், மின் மற்றும் தொலைபேசிக் கட்டணங்களின் கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் அத்தியவசியம் ஆகையினால் மற்றும் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் தவிர்ந்த வெளியில் உள்ள ஏனைய அலுவலகங்களில் இருந்து கிடைக்கப்பெறும் விலைப்பட்டியல்கள் தாமதமாகிக் கிடைக்கப் பெறுவதன் காரணமாக இந்தக் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், எவ்வாறெனினும், நி.ஒ. 94(1) இன் பிரகாரம்<br><br>* வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடுகள் இருப்பின் அன்றி வேலை, சேவை அல்லது விநியோகம் ஒன்றிற்காக எந்தவொரு செலவிற்கும் அல்லது கடப்பாட்டிற்கும் கட்டுப்படாமல் இருப்பதற்கும்<br><br>* அதற்காக ஏற்கப்பட்ட பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவினை ஒருபோதும் நிதி ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியினைத் தாண்டாமலும்,<br><br>* நிதி செலுத்தும் காலம் ஆகும் போது மேலதிக நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெறும் என்ற எதிர்பார்ப்பில் செலவுகள் அல்லது பொறுப்புக்களை ஏற்காமலும் இருத்தல் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும் என சகல பணிப்பாளர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டு உள்ளனர் என்பதனை தயவுடன் அறியத் தருகின்றேன். **(இணைப்பு 06)** |
| **10** | ஒரு வருட காலத்திலும் மேற்பட்ட காலமாக நிலவி வரும் நிலுவைக்கடன் மீதிகள் காணப்பட்டன. | 2023.12.31 ஆம் திகதியாகும் போது அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கிற்கு உரிய வகையில் 01 வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நிலவி வரும் நிலுவைக் கடன் மீதிகள் ரூ. 4,037,413.15 ஆக இருந்தது. அதில் 2026.01.01 ஆம் திகதியாகும் போது ரூ. 3,367,140.40 தொகை அறவிட்டுப் பூர்த்தி செய்யப்பட்டு உள்ளது. அதற்கு அமைய மேலும் அறவிடப்படவுள்ள ரூ. 670272.75 கடன் மீதிக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் **இணைப்பு 07** இன் ஊடாக காட்டப்பட்டு உள்ளது. |

| | | |
|---|---|---|
| **11** | நி.ஒ. 371 இன் பிரகாரம் வழங்கப்பட்ட உரிய பணிக்கான இடைக்கால கட்டுநிதி பணி பூர்த்தியடைந்து ஒரு மாத காலத்திற்குள் தீர்த்து வைக்கப்பட்டு இருக்கவில்லை. | முற்பணங்களைப் பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு தான் பெற்றுக்கொண்ட முற்பணத்தினை 10 நாட்களுக்குள் நிகழ்ச்சித்திட்டம் பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக ஈடுசெய்யுமாறு உரிய பணிப்பாளர்களின் ஊடாக நிதமும் விழிப்புணர்வூட்டல் மற்றும் பின்னாய்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டு உள்ளது. (இணைப்பு 08) |
| **12** | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் மூலம் வழங்கப்பட்டு இருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% இலும் குறைந்த மட்டம் ஒன்றில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் வருடாந்த பயிற்சித் திட்டத்திற்கு அமைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு வருட ஆரம்பத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த போதிலும் திறைசேரிச் செயலாளரின் 1/2023 ஆம் இலக்க 2023.01.27 மற்றும் ஆம் திகதிய சுற்றுநிருபத்திற்கு அமைய அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தியதன் அடிப்படையில், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ஒதுக்கீடுகள் ஒதுக்கப்படாமையின் காரணமாக வழங்க இயலுமாக இருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% வீதத்திலும் குறைவான அளவில் காணப்பட்டது. |
| **13** | தாபனத்தின் கணக்குகள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம் கீழ் மட்டத்தில் / அடி மட்டத்தில் / பாதிப்பான மட்டத்தில் காணப்பட்டது. | சுட்டிக்காட்டப்பட்டு உள்ள குறைபாடுகளை சீர்செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| **14** | சகல உத்தியோகத்தர்களும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்துகை முன்வைக்கப்பட்டு இருக்கவில்லை. | உரிய தினததனறு வழஙகபபடாத உததியோகததாகளின சொததுககள மறறும பொறுபபுககள தொடர்பான வெளிப்படுத்துகையினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. |
| **15** | அதிகூடிய சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களை உரிய முறையில் இடமாற்றம் செய்து அனுப்புவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | **1. இலங்கை விவசாய சேவை**<br><br>இலங்கை விவசாய சேவையின் திருத்தம் செய்யப்பட்ட இடமாற்றச் செயலொழுங்கு எனது தா/1/10/வி.சே./வ.இ.மா.-04 ஆம் இலக்க மற்றும் 2025.11.02 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கமத்தொழில் அமைச்சின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. அது தொடர்பில் மீண்டும் அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை முன்வைக்குமாறு கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுச் செயலாளரின் Agri/2/2/1/4/10/02 வி.சே.இ.மா. ஆம் இலக்க மற்றும் 2026.01.19 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறியத்தரப்பட்டு உள்ளதுடன், அதற்கான அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதற்காக குழு ஒன்றினை நியமித்து அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை அறியத்தருகின்றேன். |

2. இலங்கைத் தொழிநுட்பவியல் சேவை (விசேட)

விவசாயப் போதனாசிரியர் (விசேட) தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்காக அனுமதிக்கப்பட்ட இடமாற்றச் செயலொழுங்கு ஒன்று காணப்படவில்லை என்பதுடன், இடமாற்றச் செயலொழுங்கு ஒன்றினைத் தயாரித்து அதற்காக கமத்தொழில் அமைச்சுச் செயலாளரின் Agri/2/2/1/3/3/1/7-iii ஆம் இலக்க மற்றும் 2025.08.04 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டு உள்ளது. தொழிற்சங்கப் பிரிதிநிதிகளினால் மேலும் திருத்தம் செய்யப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக 2026.03.31 ஆம் திகதி முன்மொழிவுகள் கோவை ஒன்று முன்வைக்கப்பட்டு உள்ளதுடன் உரிய முன்மொழிவுகள் இடமாற்றச் செயலொழுங்கில் உள்ளடக்கப்பட வேண்டிய விதம் தொடர்பில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3. தொழிநுட்பவியல் சேவை

2023 ஆம் ஆண்டில் வருடாந்த இடமாற்றச் சபையினை நடாத்தி இடமாற்ற முனமொழிவுகள் வழங்கப்பட்ட போதிலும் விவசாயப் போதனாசிரியர்களின் தொழிற் சங்கங்களினால் நீதிமன்றத்தில் முறைப்பாடு ஒன்றினைத் தாக்கல் செய்தமையின் காரணமாக வழக்கு முடியும் வரை இடமாற்றங்களை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது.

ஒவ்வொரு சேவை நிலையங்களிலும் 05 வருட சேவைக் காலத்தினைத் தாண்டியுள்ள சகல உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்தல் ஒரே தடவையில் மேற்கொள்ள முடியாது என்பதுடன், அதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக அமைந்துள்ளன என்பதனை தயவுடன் அறியத்தருகின்றேன்.

I. உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்படுதல்.

II. வரையருக்கப்பட்ட எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களினால் அதிகூடிய கொள்ளளவில் சேவை நிலையங்களைப் பேணி வரவேண்டியுள்ளமை.

III. அந்தந்த சேவை நிலையங்களில் நாளாந்தக் கடமைகளை தடையின்றி தொடர்ச்சியாகப் பேணி வருதல்.

IV. மிகவும் கஷ்ட மற்றும் கஷ்டப் பிரதேச சேவை நிலையங்களுக்கு இடமாற்றக் கோரிக்கைகள் முன்வைக்கப்படாமை.

V. சில கஷ்டப் பிரதேச சேவை நிலையங்களுக்காக பதலீட்டாளர்களை வழங்குவதற்கு இயலாமை மற்றும் அவ்வாறான சேவை நிலையங்களில் சில உத்தியோகத்தர்கள் கஷ்டப் பிரதேச சேவை நிலையங்களிலேயே பணி புரிவதற்கு விருப்பம் தெரிவித்தல்.

| | | |
|---|---|---|
| | | VI. 2022 ஆம் ஆண்டில் இடமாற்றங்கள் விவசாயப் போதனாசிரியர் தொழிற் சங்கங்களின் எதிர்ப்புக்கள் காரணமாக இரத்து செய்யப்படுதல்.<br>VII.2022/2023 வருடாந்த இடமாற்றங்கள் விவசாயப் போதனாசிரியர் சங்கத்தின் ஊடாக தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விண்ணப்பம் காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை.<br><br>2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த இடமாற்றங்கள் ஒன்றிணைக்கப்பட்டு வருடாந்த இடமாற்றக் குழுக்கள் தாபிக்கப்பட்டு இடமாற்றக் கட்டளைகள் 2022.10.31 ஆம் திகதி வெளியிடப்பட்டன. உரிய இடமாற்றக் கட்டளைகளுக்கு அமைய 127 விவசாயப் போதனாசிரியர் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர். 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டிகளுக்காக ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் தொழிநுட்ப உதவியாளர் உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கட்டளைகள் 2022.10.31 ஆம் திகதியிடப்பட்டு வெளியிடப்பட்டன. அதற்கு அமைய, 23 ஆராய்ச்சி உதவியாளர் உத்தியோகத்தர்கள் மற்றும் 91 தொழிநுட்ப உதவியாளர் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.<br>எனினும், விவசாயப் போதனாசிரியர்களின் தொழிற் சங்கங்களினால் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பம் காரணமாக உரிய வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்ளல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.<br><br>மேற்படி வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தியடைதல் 2024.02.02 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டமையின் காரணமாக 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வகையில் மேற்கொள்ளப்பட்ட விவசாயப் போதனாசிரியர் உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயலாமல் சென்றதுடன், 2024 ஆம் ஆண்டிலும் இரண்டு மாதங்கள் பூர்த்தியடைந்து இருந்தமையினால் 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இயலாமல் சென்றது. இந்த வழக்கு நடவடிக்கை காரணமாக, 2024 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி உதவியாளர் மற்றும் தொழிநுட்ப உதவியாளர் உத்தியோகத்தர்களின் இடமாற்றச் சபையினை நடைமுறைப்படுத்துவதிலும் தடைகள் ஏற்பட்டன.<br><br>எனினும், தற்போதாகும் போது இடமாற்றச் செயலாழுங்கிற்கு ஒத்தியங்கும் வகையில் உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்து இந்தப் பிரச்சினைகள் குறைத்துக்கொள்ளப்பட்டு உள்ளன என்பதனை அறியத்தருகின்றேன்.<br><br>**4. இணைந்த சேவை** |

இணைந்த சேவைக்கு உரித்தான முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள்,அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சாரதிகள் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவையின் வருடாந்த இடமாற்றங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களினால் ஆகும். வருடாந்த இடமாற்றங்களுக்காக விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரை செய்யப்பட்டு நிகழ்நிலை முறையில் அனுப்பி வைக்கப்படுவதுடன் இந்தத் திணைக்களத்தில் 05 வருடங்களிலும் மேற்பட்ட சேவைக்காலத்தினைக் கொண்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப் பட்டியலும் தயாரிக்கப்பட்டு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கு அமைய 2024/2025 ஆம் ஆண்டில் கீழ்வருமாறு இடமாற்றக் கட்டளைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன.

| பதவி | இடமாற்றம் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 17 |
| மு.சே.உ. | 37 |
| சாரதிகள் | 18 |
| அலுவலகப் பணியாளர் சேவை | 04 |

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கு உரிய வகையில் திணைக்களத்தின் வருடாந்த உள்ளக இடமாற்றச் செயலொழுங்கினை நடைமுறைப்படுத்துவதற்காக 2024 ஆம் ஆண்டு முதல் அனுமதி கிடைக்கப்பெற்று உள்ளது. திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்யும் போது பல்வேறு பணிப்பாளர் பிரிவுகளுக்கு உரிய கடமைகளை (அலுவலக/ வெளிக்களக் கடமைகள்) மேற்கொண்டு வரும் போது விடயம் தொடர்பான அறிவு தொடர்பில் மேற்படி உத்தியோகத்தர்கள் கற்றுள்ள பட்டம் தொடர்பில் (உதா- விவசாயமானி, உணவுத் தொழிநுட்பம் தொடர்பான, விஞ்ஞானமானி போன்ற) விசேட கவனம் செலுத்தப்படுவதுடன் ஏனைய பணிப்பாளர் பிரிவுகளில் விசேட சிறப்புத் தகைமைகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் தவிர ஏனைய பாடம் ஒன்றினைக் கற்றுள்ள உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்வதன் மூலம் செயன்முறை ரீதியான பிரச்சினை தோன்றுவதனால், உள்ளக இடமாற்றங்களுக்காக விண்ணப்பித்துள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரே அலகில் 05 வருடங்களிலும் கூடுதலான சேவைக்காலம் ஒன்றினைக் கொண்டுள்ள

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தர்கள் ஆகியோர் உரிய அலகுகளில் கடமை நடவடிக்கைகளுக்கு தடையேதும் ஏற்படாத வகையில் இடமாற்றம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 2027 ஆம் ஆண்டில் உள்ளக இடமாற்ற விண்ணப்பங்களைக் கோருதல் 2026.06.30 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட உள்ளது.<br><br>இந்தத் திணைக்களத்தின் திணைக்களம் சார் பதவிகள் ஆகிய விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பண்ணை இலிகிதர், ஊடக உதவியாளர், கட்புல செவிப்புல உதவியாளர், விடுதிகள் ஆண்/பெண் கட்டுப்பாட்டாளர், விதைத் தொழிநுட்பவியலாளர், ஓவியத் தொழிநுட்பவியலாளர்,புகைப்படங்கள், கட்புல செவிப்புலத் தொழிநுட்பவியலாளர், தேனீ வளர்ப்பு செய்து காட்டுபவர், விவசாய விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை செயலாற்றுகை நடைமுறை விதிகள் கோவையின் XVIII ஆம் அத்தியாயத்தின் 250(II) ஆம் பிரிவிற்கு அமைய உத்தியோகத்தர்கள் 50 இலும் பார்க்க குறைவாக இருப்பதனால் திணைக்களத் தலைவரின் தற்றுணிபிற்கு அமைய உள்ளக இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும் 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக விவசாயக் கண்காணிப்பு பதவியில் உள்ள உத்தியோகத்தர்களின் உள்ளக இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன் இடமாற்றங்கள் தொடர்பான மேன்முறையீட்டுக் குழு கூடுவதற்கு உரிய நடவடிக்கைகள் ஆயத்தம் செய்யப்பட்டு உள்ளன.<br><br>**5. ஆரம்பநிலை பகுதியளவு தேர்ச்சியுடைய மற்றும் தேர்ச்சியுடைய (PL-02/03) மற்றும் ஆரம்பநிலைத் தேர்ச்சியற்ற (PL-01) சேவை வகுதி**<br><br>ஆரம்பநிலை பகுதியளவு தேர்ச்சியுடைய மற்றும் தேர்ச்சியுடைய (PL-02/03) மற்றும் ஆரம்பநிலைத் தேர்ச்சியற்ற (PL-01) சேவை வகுதிக்கு உரிய பதவிகளுக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதியுடனான முறையான இடமாற்றச் செயலொழுங்கு ஒன்று காணப்படவில்லை ஆகையினால் செயலாற்றுகை நடைமுறை விதிகள் கோவையின் XVIII ஆம் அத்தியாயத்திற்கு அமைய முறையான இடமாற்றச் செயலொழுங்கு ஒன்று தயாரிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டில் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. அதற்கு அமைய, 2024 மற்றும் 2025/2026 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வகையில் வருடாந்த உள்ளக இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளன. ஆரம்பநிலை பகுதியளவு தேர்ச்சியுடைய மற்றும் தேர்ச்சியுடைய (PL-02/03) மற்றும் |

| | | |
|---|---|---|
| | | ஆரம்பநிலைத் தேர்ச்சியற்ற (PL-01) பதவிகளுக்கு உரிய வகையில் 05 வருட சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்துள்ள ஊழியர்களின் பெயர்ப் பட்டியல்களைத தயாரித்து இடமாற்ற சபையிடம் முன்வைக்கப்பட்டதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட சகல ஊழியர்களையும் இடமாற்றம் செய்யும் ஆற்றல் காணப்படவில்லை.<br><br>• 05 வருடங்களுக்கு மேற்பட்ட ஊழியர்கள் சகலரையும் ஒரே தடவையில் இடமாற்றம் செய்வதன் மூலம் தாபன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதில் பிரச்சினைகள் ஏற்படுதல்.<br>• சேவைத் தேவைப்பாடு, பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுதல் ஆகிய விடயங்களின் அடிப்படையில் பதலீட்டாளர்களைப் பதிலீடு செய்யும் போது பிரச்சினைக்குரிய நிலைமைகள் தோன்றுதல். |

கலாநிதி டபிள்யூ.ஏ.ஆர்.ரீ. விக்ரமஆரச்சி,

விவசாயப் பணிப்பாளர் நாயகம்.

Dr. W.A.R.T. Wickramaarachchi
Director General of Agriculture
Department of Agriculture
Peradeniya, Sri Lanka

டி.பி. விக்ரமசிங்க,

செயலாளர்,

விவசாய, கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு,